**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி /நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சங்கரன்கோவில்**

**முன்னிலை : செல்வி.** *G.***பவித்ரா,** *L.L.M.,*

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, சங்கரன்கோவில்.**

**நீதித்துறை நடுவர், சங்கரன்கோவில் (மு.கூ.பொ)**

*2026*-**ம் ஆண்டு மார்ச் திங்கள்** *05*-**ம் தேதி வியாழக்கிழமை**

**குற்றவியல் பல்வகை மனு எண். 298/2026**

குருவிகுளம் காவல் நிலைய குற்ற எண். *41/2026*

மனு நாள் 02.03.2026

அய்யாத்துரை,

த/பெ. வேல்கோனார்

.....மனுதாரர் / உரிமையாளர்

/எதிர்/

காவல்துறை ஆய்வாளர்,

குருவிகுளம் காவல் நிலையம் .

.... எதிர்மனுதாரர் / குற்ற முறையீட்டாளர்

மனு மற்றும் வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. அரசு தரப்பில் பதில் பெறப்பட்டது.

மனுதாரர் மேற்படி வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர் என்றும், மனுதாரர் மலையான்குளம் ஊருக்கு மேற்கே உள்ள கிளிக்கூட்டு அய்யனார் கோவில் நாட்டாமையாக பொறுப்பு வகித்து வருவதாகவும், கடந்த *03.02.2026*-ம் தேதி *08.00* மணிக்கு உண்டியல் உடைக்கப்பட்டு, அதில் உள்ள பணம் ரூ.*5,000/-* யாரோ திருடிச் சென்றுவிட்டதாக குருவிகுளம் காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்திருந்ததாகவும், அந்தப் புகார் மனு சம்பந்தமாக காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு, அதன் அடிப்படையில் புலன் விசாரணை செய்து *04.02.2026*-ம் தேதி மலையான்குளம் இந்திராநகர் வேல்முருகன் மகன் முத்துக்கிருஷ்ணன் என்பவரை கைது செய்து, அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் ரூ.*5,200/-* கைப்பற்றியுள்ளார்கள் என்றும், மேற்படி பணம் காவல் நிலையத்தில் உள்ளது என்றும், மேற்படி பணத்தைப் பெற வழக்கறிஞர் மூலம் பெற போதுமான பண வசதி இல்லாத காரணத்தால் தனது சொந்தப் பிணையில் தரும்பட்சத்தில் நீதிமன்ற விசாரணைக்கு தவறாமல் ஆஜர் செய்வதாகவும் தெரிவிக்கப்பட்டு, மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது.

எதிர்மனுதாரர்/அரசு தரப்பில், குருவிகுளம் காவல் நிலைய குற்ற எண். *41/2026* பிரிவுகள் *305, 331(4) BNS* வழக்கில் கைப்பற்றப்பட்ட ரூ.*5,200/-* காவல் நிலைய பொறுப்பில் உள்ளது என்றும், மேற்படி பணத்தை நீதிமன்றம் உத்தரவிடும்பட்சத்தில் ஒப்படைக்க தயார் நிலையில் உள்ளதாகவும், மேற்படி பணத்தை மனுதாரருக்கு நீதிமன்ற நிபந்தனையின்பேரில் கொடுக்க எந்தவித ஆட்சேபணையும் இல்லை என்பதாக எடுத்துரைக்கப்பட்டது.

இரு தரப்பும் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ததில், மனுதாரர் கோரும் பி.ஆர்.எண். *147/2026*-ல் கண்டுள்ள பணம் ரூ.*5,200/-* இவ்வழக்கில் மனுதாரருக்கு பாத்தியப்பட்டது என்பதற்கு எதிராக எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டதைக் கருத்தில் கொண்டும், மேற்படி பணம் ரூ.*5,200/-* மனுதாரருக்கு வழங்கப்படாதபட்சத்தில் அவருக்கு மிகுந்த கஷ்ட நஷ்டங்கள் ஏற்படும் என்று மனுதாரர் வாதம் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலையில் இருப்பது என்று கருதியும், மேற்படி பணத்தை கீழ்க்கண்ட நிபந்தனையின் பேரில் மனுதாரரிடம் இடைக்காலமாக ஒப்படைக்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

<u>நிபந்தனைகள் :</u>

1. மனுதாரர் தனக்காக ரூ.*5,200 /-*க்கு பிணைமுறிபத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டும்.
2. சி.டி.யுடன் உடைய புகைப்படம் ஒன்றை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.
3. பஞ்சநாமா தயாரித்து வழக்கு கோப்புடன் இணைத்து வைக்க வேண்டும்.
4. நீதிமன்றம் உத்தரவிடும் நாளிலும், விசாரணையின்போதும் பணத்தை தவறாது நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த வேண்டும்.

மைசு நிபந்தனைகளின் கீழ் பி.ஆர்.எண்.*147/2026*-ல் கண்ட பணம் ரூ.*5,200/-*த்தை மனுதாரர் வசம் இடைக்காலமாக ஒப்படைவு செய்து உத்தரவிடப்படுகிறது.

PAVITHRA G

Digitally signed by PAVITHRA G
Date: 2026.03.05 20:55:06 +0300

நீதித்துறை நடுவர், (மு.கூ.பொ),
சங்கரன்கோவில்.